# கேள்வி:

# " 'சபை' என்ற வார்த்தையின் பொருள் என்ன?"

## பதில்:

*தேவன் வானங்களையும், பூமியையும் படைத்தபோது தூதர்கள் அங்கிருந்தனர்: "அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப்பாடி, தேவ புத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்கள்" (யோபு 38:7). இந்த அண்டம் முழுவதும் படைக்கப்படும் முன்னரே, இருக்கிறவராக இருக்கிறேன் என்பவர் (யாத். 3:14) தமது ஜனங்களுக்கென்று ஒரு திட்டத்தை வைத்திருந்தார். அவருடைய அளவிடற்கரிய புரிந்துகொள்ளுதலினாலும், அன்பினாலும், அவர் இயேசுவின் இரத்தத்தின் மூலமாக எக்லேஸியா என்று அழைக்கப்பட்ட ஒரு மக்களின் கூட்டத்தை, பொதுவாக சபை என்று அழைக்கப் படுவதைக் கட்டத் திட்டமிட்டார் (எபே. 1:7-9; 3:21; 1 பேது. 1:18-21).*

*அந்த சபையில், வியந்து நோக்கும் தேவ தூதர்களின் திரளான கூட்டத்திற்கு முன்பாக, தேவனுடைய அநந்த ஞானமானது வெளிப்பட வேண்டியதாயிருந்தது (எபே. 3:10, 11). இயேசு தமது எக்லேஸியாவாகிய சபையைக் கட்டுவதாக வாக்குத்தத்தம் அளிப்பதற்கு நீண்ட கால முன்னதாகவே, தூதர்கள் ஆச்சரியமான ஒன்று தோன்றப் போவதை அறிந்திருந்து, அதை உற்றுப் பார்க்க ஆசையாய் இருந்தனர் (கிரேக்கம்: parakupto[1]; 1 பேது. 1:12).*

*தூதர்களுக்கோ அல்லது மனிதர்களுக்கோ இந்த தெய்வீக நோக்கமானது முழுமையாக வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. அது ஒரு இரகசியமாகவே இருந்தது (எபே. 3:3, 4). எந்தக் கண்ணும் அதைக் காணவில்லை, எந்தச் செவியும் அதைக் கேட்கவில்லை, எந்த இருதயமும் சபையில் உணரக் கூடிய நன்மைகளைக் கற்பனை செய்ததும் இல்லை (ஏசா. 64:4; 1 கொரி. 2:9, 10).*

*தீர்க்கதரிசிகள் தாங்கள் எழுதினவைகள் இன்னதென்று அறியும்படி ஊக்கமாய்த்தேடினார்கள் (மத். 13:17; 1 பேது. 1:10). நிறைவாக, தேவன் தெரிந்து கொண்ட ஆண்டு, மாதம், நாள் மற்றும் நேரத்தில் இந்த நிறைவானது வந்தது. நிறைவாக, தேவனுடைய அநந்த ஞானமானது ஆள்பவர்கள் மற்றும் உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கு சபையின் மூலமாக அறிந்துகொள்ளும்படியாகத் தரப்பட்டது (கலா. 4:4; எபே. 3:10, 11; வெளி. 9:15).*

## உலகம் முழுவதும் அழைக்கப்பட்ட மக்கள்

*பத்திரிகைச் செய்தியாளர்கள் மற்றும் இதர ஜனங்களுக்கு "கிறிஸ்துவின் சபை" என்ற சொல் தொடரானது இன்னொரு நாமகரணக் கூட்டம் என்பதாகவே தெரிகிறது. மேலும், சில சபை அங்கத்தினர்கள் கூட "கிறிஸ்துவின் சபை ஊழியர்கள்," ''கிறிஸ்துவின் சபையின் சபைகள்'' மேலும், ''நான் ஒரு கிறிஸ்துவின் சபையான்" போன்ற நாமகரணக் கூட்டங்களின் மொழி நடைகளைப் பயன்படுத்துகின்றனர்.*

*ஆல்வின் லோரி என்ற கிறிஸ்தவ ஊழியக்காரர் ஜெர்மனியில் உள்ள பிராங்க்ஃபர்ட் என்ற இடத்தை அடைந்ததும் அங்குள்ள தொலை பேசிப் புத்தகத்தில் கிறிஸ்துவின் சபை என்ற பெயரைத் தேடினார். இது ஜெர்மன் மொழியில் Kirche Christi என்றிருக்க வேண்டும்; ஆனால் அதற்குப் பதில் அங்கு "கிறிஸ்துவின் சமுதாயம்" என்ற பொருள்படும் Gemeinde Christi என்ற வார்த்தையைத்தான் கண்டார்.*

*ஜெர்மன் வார்த்தையான Gemeinde என்பது ஒருவரை, இயேசுவின் வார்த்தையாகிய ''எக்லேஸியா''வை நினைக்க வைக்கிறது. எக்லேஸியா என்ற இந்த வார்த்தையே "சபை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, ஆனால் இது "வெளியே அழைக்கப்பட்டவர்கள்'' என்ற பொருளைத் தருகிறது. இவ்வார்த்தையானது தேவனுடைய அழைப்பைக் கேட்டு வரும், அவருடைய பிரித்தெடுக்கப்பட்ட சமுதாயத்திற்கு ஆசீர்வாதம் அருளும்படியான தேவனாகிய தகப்பனுடைய அன்பின் திட்டத்தைக் குறிக்கிறது (மத். 16:18).*

*இயேசு பயன்படுத்திய இவ்வார்த்தையில் மதரீதியான பொருளெதுவும் இல்லை. கிரேக்க புராணத்தில், அர்ப்பேயுஸ்*

என்பவன் தனக்கென்று காட்டு மிருகங்களின் கூட்ட மொன்றை ஏற்படுத்திக் கொண்டான் என்று கூறப்படுகிறது. இது எக்லேஸியா என்று அழைக்கப்பட்டது. அந்த மிருகங்கள் திரேஸியன் மலையில் அவன் சொன்னதைக் கேட்டன. எபேசுவின் குடிமக்கள் கூடி வந்த நியாய சங்கத்திற்கும் லூக்கா இந்த வார்த்தையைப் பயன்படுத்துகின்றார் (அப். 19:39).

மேலும் லூக்கா இதே வார்த்தையை, பவுலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சத்தமிட்ட, அடங்காத ஒரு கூட்டத்தை விளக்கிக் கூறவும் பயன்படுத்தினார் (அப். 19:32, 41). மேலும், எகிப்தி லிருந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குச் செல்வ தற்கு அழைக்கப்பட்ட இஸ்ரவேல் தேசத்தை விவரிப்பதற்கும் லூக்கா இந்த வார்த்தையைப் பயன்படுத்தினார் (அப். 7:38). இவற்றுடன் கூட, இயேசுவைப் போலவே லூக்காவும் இவ்வார்த்தையைப் பயன்படுத்தினார்: ''என்னிடத்தில் வாருங்கள்'' என்ற இயேசுவின் அழைப்பைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படியும் கூட்டத்தாரைக் குறிக்க இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டது (மத். 11:28; 16:18; அப். 5:11; அப். 2:47).

அநேக ஆங்கில வேதாகமங்களில் எக்லேஸியா என்ற வார்த்தை, "பொது ஆராதனைக்குக் கூடி வரும் பக்தியுள்ள பரிசுத்தர்கள்" என்று பொருள்படும் "church" என்று தவறான மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது, இது வெப்ஸ்ட்டர் அகராதியின்படி செய்யப்பட்டதாகும். இவ்விளக்கத்தின்படி, "church" என்ற வார்த்தைக்கும், இயேசுவின் "எக்லேஸியா" என்ற வார்த்தைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

மேலும், கிரேக்க புதிய ஏற்பாட்டிலிருந்து முதன்முதல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட (வில்லியம் டின்டால் 1525ல் தயாரித்த) புதிய ஏற்பாட்டில், எக்லேஸியா என்ற கிரேக்க வார்த்தை "church" என்று தரப்படாமல் "congregation" என்று தரப்பட்டுள்ளது, கிங் ஜேம்ஸ் வேதாகம மொழி பெயர்ப்பாளர்கள் ஐம்பத்து நான்கு பேரும் தங்களுக்கு முன்பாக இந்த டின்டாலின் மொழிபெயர்ப்பை வைத்து இருந்தனர், அது மிகவும் சரியானதே என்று அறிந்திருந்தனர். இருப்பினும், இங்கிலாந்து சபையின் தலைவராக இருந்த கிங் ஜேம்ஸ்-I, அவர்கள் டின்டாலைப் பின்பற்றுவதைத் தடை செய்தார். அவர் "எக்லேஸியா" வார்த்தை "congregation" என்று மொழிபெயர்க்கப்படக்கூடாதென்றும், "church" என்றே மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்றும் கட்டளையிட்டார்.[2]

இதன் விளைவாக, ஆங்கிலம் பேசுவோரின் உலகத்தில் ஆவியினால் ஏவப்பட்டு எழுதியவர்கள் பயன்படுத்தாத ஒரு வார்த்தையைப் பயன்படுத்தி பாரமாக்க வேண்டியதாயிற்று. அலெக்ஸான்டர் கேம்ப்பெல் தமது மொழிபெயர்ப்பில்[3] டின்டாலை சரியாகப் பின்பற்றினார், ஆனாலும் கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில் பயன்படுத்தப்பட்ட "church" என்ற வார்த்தை இன்னும் ஆதிக்கம் செலுத்துகின்றது.

"Church" என்ற வார்த்தை மிகச் சிறந்த மொழிபெயர்ப்பாக இல்லாத போதும், ஜனங்கள் அதை கட்டிடங்களுக்குப் பயன்படுத்தாத வரையிலும் அது வேதத்திற்கு முரணானதல்ல. கர்த்தரால் அழைக்கப்பட்ட ஜனங்களே கட்டிடமாவார்கள், மற்றபடி கட்டப்பட்ட கட்டிடங்கள் சபையென்றாகாது. கர்த்தரால் அழைக்கப்பட்டவர்கள் ஜீவனுள்ள கற்களாவார் கள், அவர்களைக் கொண்டு சபை என்ற கட்டிடம் எழும்பு கிறது (1 பேது. 2:5); கிறிஸ்தவர்கள் தேவனுடைய மாளிகை யாய் இருக்கின்றனர் (1 கொரி. 3:9). பாவிகள், "இருளின் அந்தகாரத்தினின்று அவருடைய ஆச்சரியமான ஒளியினிடத் திற்கு வரவழைக்கப்படுகின்றனர்" (1 பேது. 2:9ஆ).

## பிராந்திய சபை

உலகளாவிய ஒரே சரீரமாகிய சபைக்குள் முழுகுதல் மூலம் பிரவேசித்ததும், அழைக்கப்பட்ட மக்களாகிய கிறிஸ்தவர்கள் - வெளியே அழைக்கப்பட்டவர்கள் மாத்திரமல்ல, ஆனால் எக்லேஸியாவில் ஒன்றாக அழைக்கப்படுகின்றனர். இது பிராந்திய சபையைக் குறிப்பதற்கும் பயன்படும் வார்த்தை யாகும் (1 கொரி. 11:18; 14:23). பிராந்திய சபையைக் குறிக்கப் பரிசுத்த ஆவியானவர் எக்லேஸியா என்ற வார்த்தை தவிர, பின்வரும் வார்த்தையையும் பயன்படுத்துகிறார்: *sunagoge* என்ற இவ்வார்த்தை, "ஒன்றாக வழி நடத்துதல், சபை, கூட்டம்" என்ற பொருள் தருகிறது (யாக். 2:2).

கர்த்தரிடத்தில் அன்பு கூருகிற யாவரும் பிராந்திய சபை கூடி வருதலை தவற விடாமலிருப்பார்கள் (கிரேக்கம்: *episunagoge*; எபி. 10:25). சபை கூடுதலை விட்டுவிடக் கூடாதென்ற இந்த தெய்வீகக் கட்டளைக்கப்பால், அவர்கள் ஒன்றாயிருந்து, சகலத்தையும் பொதுவாக அனுபவித்தனர். சாதாரணமாக ஜனங்கள் நட்புறவுடன் இருக்கின்றனர். "சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்ட வேண்டும்; சகோதர

*னிலும் அதிக சொந்தமாய்ச் சிநேகிப்பவனுமுண்டு'' (நீதி. 18:24). பிரிந்துபோகிறவர் அசாதாரணப்பட்டவராவார்: ''பிரிந்து போகிறவன் தன் இச்சையின்படி செய்யப் பார்க்கிறான், எல்லா ஞானத்திலும் தலையிட்டுக் கொள்ளுகிறான்" (நீதி. 18:1).*

*பிராந்திய சபையைப் பொறுத்தமட்டில், கிறிஸ்தவர்கள், "...ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்" (எபி. 10:25* KJV*). எந்த நாள்? நியாயத்தீர்ப்பின் நாளா? "அந்த நாளையும் நாழிகையையும் ஒருவனும் அறியான்" (மத். 24:36அ) என்பதால் இது அந்த அர்த்தத்தைத் தர முடியாது. அந்த நாள் திருடன் போல வரும் (1 தெச. 5:4).*

*எந்த நாள்? கி.பி. 70ல் எருசலேம் அழிக்கப்பட்ட நாளா? மக்கள் அந்த நாள் நெருங்கி வந்ததைக்காண முடிந்தது, ஆனால் அந்த நாளன்று கிறிஸ்தவர்கள் கூடியிருக்கக் கூடாதிருந்தது: "யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப் போகக் கடவர்கள்" (மத். 24:16).*

*எந்த நாள்? கர்த்தருடைய நாளா? வாரத்தின் முதல் நாளா? அந்த நாள் நெருங்குவதை கிறிஸ்தவர்கள் காண முடிந்தது, இன்றும் காண முடியும். திங்கள் முதல் சனி வரை அதை அவர்கள் காண முடியும். மிக அவசரமான பிரயாணத்திலும் கூட துரோவாவில் சபை கூடிவருதலுக்காகவும் அப்பம் பிட்குதலுக்காகவும் பவுல் (திங்கள் முதல் ஞாயிறு வரை) "ஏழு நாட்கள் தங்கியிருந்தார்" (அப். 20:6, 7; மற்றும் வ. 16). துரோவாவில் தங்கியிருந்த அதே காரணத்திற்காக அவர் புத்தேயோலியிலும் ஏழு நாட்கள் தங்கியிருந்தார் (அப். 28:13, 14).*

*கி.பி. 101ல், இக்னேஷியஸ் என்பவர், கிறிஸ்தவர்கள் ''இனிமேலும் ஓய்வுநாளை ஆசரிக்கிறதில்லை, ஆனால் கர்த்தருடைய நாளை ஆசரிப்பதிலேயே ஜீவிக்கிறார்கள் ஏனெனில், அதில்தான் நம்முடைய வாழ்வே அவரால் ஊற்றாக வெளிப்படுகிறது" என்று எழுதியுள்ளார். கி.பி. 150ல் ஜஸ்ட்டின் மார்ட்டியர் என்பவர், ''ஒவ்வொரு ஞாயிறன்றும் தேவ ஆராதனையின் முக்கிய பகுதியாக, கர்த்தருடைய பந்தியை ஆசரித்தல் இன்னும் நடைபெறுகிறது" என்று எழுதியுள்ளார். இரண்டாம் நூற்றாண்டின் பதிவேடான அப்போஸ்தலர்களின் அறிவுரை என்ற நூலில், "ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும்*

*(கிறிஸ்தவர்கள்) அப்பம் பிட்கவும், நன்றி செலுத்தவும் கூடினார்கள்" என்று கூறப்படுகிறது.*

## உலகளாவிய சபை

*உலகளாவிய சபை, ஒரு பெருவிருந்துக் கூட்டம், பூரணராக்கப்பட்ட நீதிமான்களின் ஆவிகள் யாவரும் கூடுதல் என்பதே தகப்பனுடைய திட்டத்தின் உச்சபட்ச, நிறைவான நோக்கமாகும். அவர்கள், எண்ணிக்கைக்கடங்காத தூதர்களோடு ஐக்கியமாகி, உணர்வுப்பூர்வமான ஒரு விழாவில் அனைவரும் சேர்ந்திருப்பார்கள், அது, paneguris (எபி. 12:23) என்று அழைக்கப்படுகிறது. ஆவியின் ஏவுதலினாலான இவ்வார்த்தை ஒரு கூட்டு வார்த்தையாகும். Pan என்றால் "அனைவரும்" என்றும் aguris என்றால் "கூடுதல்" என்றும் பொருள் தரும்.*

*இஸ்ரவேலரின் ஒரு விசேஷமான விழா நாளில், கர்த்தர் "நீங்கள் ஒன்றாக இருந்து சந்தோஷப்படுங்கள்" என்று கட்டளையிட்டுள்ளார் (உபா. 16:15). இப்படிப்பட்ட விழாவை கிரேக்கப் பழைய ஏற்பாடு paneguris என்றழைக்கிறது (எசே. 46:11; ஓசி. 2:11; 9:5). கிரேக்கர்கள் மத்தியில் paneguris என்பது ஒலிம்பிக் விளையாட்டின் கொண்டாட்டமாயிருந்தது. கிறிஸ்தவர்கள் மத்தியில் paneguris என்பது எல்லாக் காலங்களிலும் இரட்சிக்கப்பட்டவர்களின் முடிவற்ற விழாவாகவும், பரலோகம் மற்றும் பூலோகத்தில் உள்ள தேவனுடைய முழுக்குடும்பமாகிய தூதர்கள் மற்றும் மனிதர்களின் விழாவாகவும் உள்ளது (எபே. 3:15).*

*ஒரு வகையில், கிறிஸ்தவர்கள் ஏற்கனவே இப்படிப்பட்ட ஒரு paneguris-ஐ அனுபவிக்கின்றனர், ஏனெனில் எபிரெய ஆசிரியர் எபி. 12:22ல் நிகழ்கால முற்றுவினைச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். அவர்கள் இப்பொழுதே தேவனோடும், தேவனின் பக்கம் உள்ள ஜீவனுள்ளோர், மரித்தோர் யாவருடனும் - இடத்தளவில் பிரிந்திருந்தாலும் - ஆவிக்குரிய வகையில் ஐக்கியமாயுள்ளனர்.*

*ஆயினும் முழுமையான பொருளில் பார்த்தால், கிறிஸ்தவர்கள், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருடன் நித்திய இராஜ்யத்தில் அமர்ந்து - பெரிய வெள்ளை சிங்காசனத்தையும், தேவனுடைய முகத்தையும் பார்க்கும் வரையில் -*

உலகளாவிய சபை என்பது எதிர்காலத்தில் ஏற்படுவதாகவே இருக்கும் (மத். 8:11; வெளி. 20:11; 22:4).

## முடிவுரை

"சபை" என்பது தேவனால் அழைக்கப்பட்டவர்களின் குழுவாகும். அதாவது, இந்தக் குழுவில் உள்ளவர்கள் தேவனுடைய அழைப்பை ஏற்று, பாவத்தை விட்டுவிட்டு, அவருக்குக் கீழ்ப்படிகிற வாழ்க்கை வாழ்பவர்கள் ஆவார்கள். அவர்கள், அவரை ஆராதிக்க தவறாமல் கூடுகின்றனர், காலங்களின் முடிவில் அவர்கள் பரலோகத்தில், தேவனுடைய கீழ்ப்படிதலுள்ள மக்கள் யாவரோடும் இணைந்து கொள்வார்கள்.

---

**குறிப்புகள்**

[1]யோவான் 20:11லும் இதே வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது; "மரியாள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்து." [2]அலெக்ஸாண்டர் கேம்ப்பெல், "கிங் ஜேம்ஸின் அறிவுறுத்தல்கள்," கிறிஸ்தவ பாப்திஸ்து, தொகுதி 2 (பஃபல்லோ, Va.: இதை எழுதியவர், 1827; மறுபதிப்பு, நாஷ்வில்: காஸ்ப்பல் அட்வொகேட் கோ., 1955), 78. [3]இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் மற்றும் சுவிஷேகர்களின் பரிசுத்த எழுத்துக்கள், புதிய ஏற்பாட்டின் பொதுவான மொழிநடை (ஜீவனுள்ள வார்த்தைகள்), ஜார்ஜ் கேம்ப்பெல், ஜேம்ஸ் மாக்னைட் மற்றும் பிலிப் டாட்ரிட்ஜ் ஆகியோரால் மொழிபெயர்க்கப்பட்டு, முன்னுரை, பல்வேறு சீர்படுத்தல்கள், மற்றும் அலெக்ஸான்டர் கேம்ப்பெல்லால் எழுதப்பட்ட பிறசேர்க்கை ஆகியவை உள்ளன (n.p., 1826; மறுபதிப்பு, நாஷ்வில்: காஸ்பல் அட்வொகேட் கோ., 1954).

## *சபையின் ஊழியம்*

*புதிய ஏற்பாட்டு சபையின் ஊழியமானது, கர்த்த ருடைய பிரதான கட்டளையில் தரப்பட்டுள்ளது. இதை அவர் மேகங்கள் மூலம், அப்போஸ்தலர்கள் கண்களுக்கு முன்பாக பரலோகத்துக்கு எழுந்தருளிச் செல்வதற்குச் சற்று முன்னதாகக் கொடுத்தார். பிரதான கட்டளை உலக முழுவதற்குமான ஒரு திட்டமாகும், அதை இயேசு பின்வரும் அற்புதமான வார்த்தைகளில் குறிப் பிட்டுள்ளார்:*

> *ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார் (மத்தேயு 28:19-20).*

*சபையின் பணியை இந்தக் கட்டளை சுருக்கமாய்க் கூறுகின்றது: எல்லா நாட்டவருக்கும் போதித்து, ஞானஸ் நானம் கொடுத்தல். இவ்விதமாய் ஒலித்த இக்கட்டளை யினால், ஆதி கிறிஸ்தவர்கள் முழு உற்சாகமாக சுவிசேஷப் பணியாற்றினார்கள். அவர்கள் எல்லா இடங்களுக்கும் சென்று வசனத்தைப் பிரசங்கித்தனர். புதிய ஏற்பாட்டு சபையாரின் சுவிசேஷ அறிவிப்பு மற்றும் ஊழியத்தில் வைராக்கியம் ஆகியவை பட்சிக்கிற அக்கினிபோல் இருந்தது. அவர்கள் கிறிஸ்து மரித்து அதன் மூலம் எல்லா நாட்டவருக்கும் பாவமன்னிப்பைப் பெற்றுத் தந்தார் என்ற செய்தியை மற்றவர்களுக்குச் சொல்லும்படியாக மட்டுமே வாழ்ந்தார்கள்.*

*இயேசுவின் தேவத்துவம் மற்றும் சில பிரசங்கங்கள் என்ற*
*நூலிலிருந்து தழுவப்பட்டது*
*ஜெஸ்ஸி ஆர். கெல்லம்ஸ்*